| Headline | University may build in Bagan Serai - MP hopes | | |
|---|---|---|---|
| MediaTitle | Makkal Osai | | |
| Date | 29 Dec 2014 | Language | Tamil |
| Circulation | 28,000 | Readership | 180,000 |
| Section | News | Color | Black/white |
| Page No | 11 | ArticleSize | 450 cm² |
| AdValue | RM 1,313 | PR Value | RM 3,939 |
| | | | |



# பாகான் செராய் தொகுதியில் பல்கலைக்கழகம் அமையும்!

## நாடாளுமன்ற உறுப்பினர் நம்பிக்கை








**கவின்மலர்**

பாகான் செராய், டிச.29-

பாகான் செராய் நாடாளுமன்றத் தொகுதியில் பல்கலைக்கழகமும் உயர்கல்விக் கூடங்களும் அமையும் என்று பாகான் செராய் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் முகமட் நோர் அஸ்மி பின் ஹாஜி கசாலி நம்பிக்கை தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை இங்கு தமது சேவை மையத்தின் ஏற்பாட்டில் யூபிஎஸ்ஆர் தேர்வில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்குச் சிறப்புச் செய்யும் நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றி அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

புக்கிட் மேரா எம்கே லேண்ட் நிறுவனத்துடன் இணைந்து தேசியப் பல்கலைக்கழகத்தின் வட மாநில வளாகத்தை இங்கு அமைக்கும் திட்டம் விரைவில் செயல் வடிவம் பெறும் என்று அவர் சொன்னார்.

அதற்காக மூவாயிரம் ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.அலோர் பொங்சுவில் விரைவில் திறக்கப்படவுள்ள வடக்கு தெற்கு நெடுஞ்சாலையின் நுழைவாயில் டோல் சாவடியால் பாகான் செராய் வட்டாரம் பெரும் வளர்ச்சியைப் பெறும் என்று அவர் சுட்டிக் காட்டினார். அப்போது இத்தொகுதியில் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்கள் உருவாவதைப் பார்க்க முடியும். அத்தகைய சூழ்நிலையில் இங்கு உயர்கல்விக் கூடங்கள் அமைவது அவசியம் என்று அவர் வலியுறுத்தினார்.அது குறித்து தாம் நாடாளுமன்றத்தில் தொடர்ந்து குரல் எழுப்பி வருவதாகக் கூறினார்.

குறிப்பாகக் கடந்த பல ஆண்டுகளாக கிரியான் மாவட்டத்தில் அனைத்துலக வானூர்தி நிலையம் அமைப்பது குறித்துப் பேசப்பட்டு வருகிறது.கடைசியாக 2010ஆம் ஆண்டு பேரா மாநில மந்திரி புசார் டத்தோஸ்ரீ டாக்டர் ஸம்ரி பேரா மாநிலத்தில் குறிப்பாக கிரியான் மாவட்டத்தில் அனைத்துலக விமான நிலையம் அமைய வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.அது பற்றி எத்தகைய பதிலும் வராத நிலையில் அண்மையில் கெடா கூலிமில் அனைத்துலக விமான நிலையம் அமைப்பது பற்றி தகவல் வெளியாகியுள்ளது வியப்பாக உள்ளது. பாகான் செராய் தொகுதியில் விமான நிலையும் அமையும் திட்டம் குறித்து அடுத்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் தாம் கேள்வி எழுப்பப் போவதாக அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் 7ஏ பெற்ற பாகான் செராய்,சிம்பாங் லீமா தமிழ்ப் பள்ளிகளின் இரண்டு மாணவர்களையும் சேர்த்து 5ஏ பெற்ற தேசியப்பள்ளிகளுடன் மொத்தம் 116 மாணவர்களுக்குச் சிறப்புச் செய்யப்பட்டது. ம.இ.கா. பாகான் செராய் தொகுதித் தலைவர் பு.பொன்னழகன், இளைஞர் பகுதித் தலைவர் சு.சற்குணன், மக்கள் சக்திக் கட்சியின் பாகான் செராய் தொகுதித் தலைவர் சுப்பிரமணியம் என்ற சங்கர், ம.இ.கா. மாத்தாங் குருடு கிளைத் தலைவர் ரம்பையா என்ற ராமு, அண்டை அயலார் நல்லுறவு இயக்கத் தலைவர் கே. சுப்பிரமணியம், பாகான் செராய் தமிழ்ப்பள்ளியின் துணைத் தலைமையாசிரியர் பெ.சோமசுந்தரம், பெற்றோர் - ஆசிரியர் சங்கத் தலைவர் எம்.எஸ்.மணியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Powered by: iSENTIA